**சி.பி.எண்.45/2024** 26.09.2025

**ம.த.சாட்சி 1 புஷ்பா குறுக்கு விசாரணை**

நிர்வாகம் எனக்கு அளிப்பதாக கூறிய செட்டில்மெண்ட் தொகையை அளிக்கவில்லை அதை கேட்டு இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன். தொழிற்சாலை தற்போது இயங்கவில்லை என்றால் சரிதான். 2019-ம் ஆண்டில் இருந்தே தொழிற்சாலை இயங்கவில்லை என்றால் அதன்பிறகு 1 வருடம் இயங்கியது பின்னர் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்கியதால் தான் மூடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் தொகை பற்றி சொல்வதற்கு முன்பே நான் ராஜினாமா கடிதம் அளித்தேன் என்றால் நிர்வாகத்தினர் எங்களை அளிக்கவைத்தார்கள். என்னுடன் சேர்ந்து மொத்தம் 500 நபர்கள் ராஜினாமா கடிதம் அளித்தார்கள். எங்களை கட்டாயப்படுத்தி ராஜினாமா கடிதம் அளிக்கவைத்தார்கள் என்பதைக் குறித்து நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. என்னுடன் ராஜினாமா கடிதம் அளித்த 500 நபர்களும் புகார்கள் கொடுத்தார்களா என்று எனக்கு எதுவும் தெரியாது. நான் ராஜினாமா கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் எனக்கு என்னென்ன தொகை சேரவேண்டும் என்று நிர்வாகம் கூறியது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நிர்வாகம் என்னிடம் ஒரு ஒப்பந்தம் போட்டது என்றால் சரிதான். நான் ஒப்புக்கொண்டு தான் நிர்வாகம் தொகையை அளிக்கும் என்று நம்பிக்கையின் அடிப்படையில் கையொப்பம் போட்டேன். நிர்வாகம் உறுதி செய்த தொகைக்காக எனக்கு காசோலை ரூபாய் 1,40,645 அளித்தது என்றால் சரிதான். நிர்வாகம் நிர்ணயித்த அந்த தொகையை குறித்து எனக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை என்றால் சரிதான். முதலில் நிர்வாகம் அந்த தொகைக்காக தேதி குறிப்பிட்டு காசோலை அளித்தது நாங்கள் சென்று கேட்ட பின்பு அந்த காசோலையை பெற்றுக்கொண்டு வேறு ஒரு காசோலையை தேதி குறிப்பிடாமல் நிர்வாகம் எங்களுக்கு அளித்தது. இந்த விவரங்களை என்னுடைய மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை. நிர்வாகம் காசோலையை அளிப்பதற்கு முன்பு அந்த தொகையை அளிப்பதாக உறுதி கூறி தான் காசோலை அளித்தது என்றால் சரிதான். அந்த காசோலையை அளிக்கும் பொழுது என்னிடம் ஒரு கடிதத்தில் நிர்வாகம் என்னிடம் கையொப்பம் பெற்றது என்றால் சரிதான். அந்த கடிதம் ம.த.சா.ஆ4 என்றால் சரிதான். அந்த கடிதத்தில் நிர்வாகத்திடம் பணம் இல்லாததால் நிர்வாகத்தின் அசையா சொத்துக்களை விற்று பின்பு பணத்தை அளிப்பதாக நிர்வாகம் கூறியிருந்தது என்றால் சரிதான். அதற்கு ஒப்புக்கொண்டு தான் நான் காசோலை பெற்றேன் என்றால் சரிதான். அந்த கடிதம்

ஆங்கிலத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை நான் கேட்ட பின்பு அந்த விவரங்கள் தெரிய வந்தது இருப்பினும் நம்பிக்கையின் அடிப்படையில் காசோலையை பெற்றுக்கொண்டேன். நிர்வாகம் இன்றைய தேதி வரை சொத்துக்களை விற்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிர்வாகம் ஒப்புக்கொண்ட தொகையை கேட்காமல் கூடுதலாக இந்த மனுவில் தொகையை கோரியுள்ளேன் என்றால் சரிதான். தொழிற்சாலை மூடப்படுவதற்கு முன்பே 2016 -ல் இருந்தே வேலை குறைவாக இருந்தது என்றால் இருக்கலாம். இருப்பினும் அப்பொழுது நிர்வாகம் அங்கு பணிபுரிந்த சுமார் 2000 பணியாளர்களில் யாரையும் ஆட்குறைப்பு செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு நிர்வாகம் சம்பளம் முழுதாக வழங்கியது என்றால் சரியாக கொடுக்கவில்லை. நேரம் தவறி சம்பளம் வழங்கினார்கள். தொழிற்சாலை சரியாக இயங்காததால் தான் 2019-ல் ராஜினாமா கடிதம் அளித்து வேலையை விட்டு நின்றோம் என்றால் சரிதான். நிர்வாகத்திடம் போட்ட ஒப்பந்தத்தை மீறி அதிக தொகை கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாலும் நிர்வாகம் ஏற்கனவே எனக்கு காசோலை அளித்துள்ளதாலும் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.09.26 17:18:15 +0530